[1990 மே 3

என்பதையும் கண்டறிந்து, இப்போது அறிக்கை தயாரிக்கின்ற பணியைச் செய்து வருகிறது. அந்தப் பணி விரைவுபடுத்தப் படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதற்கு நன்றி. நான் கேட்டது, சாக்கடை தண்ணீர் தொடர்ந்து அங்கே வந்து தேங்கி நிற்கிறது. அதன் விளைவாக, பன்றிகளின் இருப்பிடமாக அது மாறிக் கொண்டிருக்கிற காரணத்தினால் பல தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த மாதம் குடிநீர் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக கோவைக்கு வருவதாக ஏற்கெனவே தெரிவித்து இருப்பதாலும். அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, அந்த நொய்யலாற்றிலே தேங்கி நிற்கக்கூடிய, அந்தச் சாக்கடைத் தண்ணீர் தேங்கி நிற்கிற இடங்களையெல்லாம் பார்வையிட்ட பிறகாவது, அந்த நகர மக்களின் சுகாதாரம் கருதி, அவர்கள் துறையின் மூலமாக மேல் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எங்கள் துறையினுடைய பணி அல்ல. அந்த நகராட்சியே செய்யவேண்டிய பணி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நகராட்சியோடு பேசி, அந்தப் பணியைச் செய்ய லாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நூற்பு ஆலை திறத்தல்.

*984. திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, நமனசமுத்திரம் நூற்பு ஆலையை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) அந்த ஆலை எப்பொழுது திறக்கப்படும் ?

1990 மே 3]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டையில் நமனசமுத்திரம் என்ற ஊரில் உள்ள லட்சுமி ஷண்முகா ஸ்பின்னிங் மில்ஸ் என்னும் நூற்பாலை கடந்த ஜூன் 1986-லிருந்து நிதி நெருக்கடி, தொழிலாளர் பிரச்சினை போன்ற காரணங்களால் மூடப்பட்டது. கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் நியமிக்கப்பட்ட நிரந்தரக் குழு (Standing Committee) இந்நூற்பாலையின் நிலைப்புத் தன்மை குறித்து இருமுறை ஆராய்ந்து இந்நூற்பாலை நிலைப்புத் தன்மையினை அடைய இயலாது எனக் கருத்து தெரிவித்தது. அதன் பின்னர் அரசு உயர் அலுவலர்கள் அடங்கிய குழு இந்நூற்பாலையின் நிர்வாகத்துடன் 14—3—1989 அன்று நூற்பாலையினை மீண்டும் திறந்து நடத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தது. அந்நூற்பாலையின் நிர்வாகம் அக்கூட்டத்தில், தமது தொடர்ந்த நிதி நெருக்கடியினால் தங்களால் தொடர்ந்து நடத்த இயலாது என்று தீர்மானமாக தெரிவித்துள்ளனர். மேலும் நூற்பாலையினை தாங்கள் விற்க முடிவு செய்துள்ளதாகவும் அது தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே நூற்பாலையின் தற்போதைய நிர்வாகம் நூற்பாலையினை ஏற்க முன்வருபவரோடு கைத்தறி மற்றும் துணிநூல் துறையை அணுகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகம் இந்நூற்பாலையினை மேற்கொண்ட பின்னர், புதிய நிர்வாகத்தின் தேவையறிந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும்,

(ஆ) மேற்கூறிய நடைமுறைகளுக்குப் பின்னர்தான் நூற்பாலை திறக்கப்படுவது சாத்தியமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருமயம் தொகுதி தொழில் வளம் இல்லாத தொகுதியாகும். ஏற்கெனவே அந்தப் பகுதியில் இயங்கிவந்த ஒரே ஒரு நூற்பாலையான நமனசமுத்திரம் லட்சுமி ஷண்முகா நூற்பாலை கடந்த 5 ஆண்டுகளாக மூடப்பட்டு 600-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றனர். தமிழக முதல்வர்

தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது, அதைப் பரிசீலனை செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். அருள்கூர்ந்து, எங்களுடைய தொகுதியில் இயங்கி வந்த இந்த ஒரே ஒரு நூற்பாலையை அரசு ஏற்று நடத்த முன்வருமா? அதிலும் இந்த ஆண்டே நடத்துவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிர்வாகம், தொடர்ந்து நிதிநிலை நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் திறக்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், அந்த ஆலையை வெளியாருக்கு விற்பதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். யாராவது வாங்குவதற்குத் தயாராக இருந்தால், அரசின் சார்பாக அந்த ஆலையைத் திறப்பதற்கு வேண்டிய அத்தனை சலுகைகளும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள்.

*2586. திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் லாபத்தில் இயங்குபவை எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இரண்டு.

அவைகள் (1) நீடாமங்கலம் பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

(2) மன்னார்குடி பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

(ஆ) ஒன்று.

நீடாமங்கலம் பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.